**DEPOSITION OF WITNESS**
**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 167/2019.** | | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | | |
| **Name** | : | மகாலிங்கம் | **Caste** | : | |
| **Father's/ Husband's Name** | : | சுப்பையா | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.08.2023

---

**முதல் விசாரணை**:

1. நான் சூலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் எனது அண்ணன் மனைவி ஆவார். கடந்த 2019ம் ஆண்டு சம்பவம் நடந்தது. சம்பவத்தன்று காலை சுமார் 10:00 மணிக்கு மேல் நான் எனது தோட்டத்திற்கு சென்று வேலையை முடித்து திரும்ப எனது இருசக்கர வாகனத்தில் குன்னுவார்பட்டி ரோட்டில் வந்து கொண்டிருந்த போது புகார்தாரர் வழியில் அழுதுகொண்டிருந்ததை பார்த்தேன். நான் என்னவென்று கேட்டபோது அவர் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க செயினை ஒரு நபர் அத்துக்கொண்டு சென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார். நான் மேலும் விசாரித்தபோது முன்பின் தெரியாத அந்த நபர் இருசக்கர வாகனத்தில் வந்து புகார்தாரரையும் ஏற்றிக்கொண்டு வந்ததாகவும், வழியில் பெட்ரோல் இல்லை என்று இறக்கிவிட்டதாகவும் புகார்தாரர் இறங்கி நடந்து செல்லும் போ்து அவர் பைக்கை திருப்பி ஸ்டார்ட் செய்து நிறுத்திவிட்டு புகார்தாரரிடம் நகையை பறித்து கொண்டு அவரது இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டதாக சொன்னார்.

2. அக்கம்பக்கத்தில் விசாரித்து பார்த்ததில் விபரம் எதுவும் தெரியவில்லை. ஆதலால் அன்றையதினம் சுமார் 04:00 மணியளவில் புகார்தாரருடன் காவல் நிலையம் சென்று புகார்தாரர் புகார்வாக்குமூலம் கொடுத்தார். எதிரியை இரண்டு மாதம் கழித்து காவல் நிலையம் சென்று அசா.1 பார்த்துள்ளார், நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** என் அண்ணன் உயிருடன் இருக்கிறார். சம்பவம் நடந்ததாக சொல்லும் சாலை கிழமேல் சாலை ஆகும். சாலையின் இருபுறமும் தோட்டங்கள் உள்ளன என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக தோட்டம் குன்னுவார்பட்டிக்கு மேற்கே உள்ளது. நான் தினமும் தோட்டத்திற்கு சென்றுவிட்டு ஊருக்கு வருவது வழக்கம். என் தோட்டத்தில் இருந்து ஊர் 3 முதல் 4 கி.மீ தூரம் இருக்கும். அசா.1 சொந்தமாக தோட்டம் வைத்துள்ளார் என்றால் சரிதான். அவரும் அதே போல் தினமும் தோட்ட வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, அசா.1 சொல்லி தான் சம்பவம் பற்றி தெரியும்.